3—

பகுதிநேர நியாய விலைக் கடை

***49290—திரு. கே.எஸ். மூர்த்தி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமத்தி–வேலூர் தொகுதி, கபிலர்மலை ஒன்றியம், திடுமல் ஊராட்சி, திடுமல் நகப்பாளையத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சத்தமில்லாமல் சாதனைகள் பல புரிந்து, மக்களின் முதல்வர் என்று அனைவராலும் போற்றப்படுகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு, (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்பான நிருவாகத்திற்கான இந்தியாவின் சிறந்த மாநிலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கும், காற்றினிலே இன்பத் தமிழ் கீதம் ஒலிக்கும் வானொலி நடத்திய கருத்துக்கணிப்பின்மூலம் ஆளுமைத் திறன்மிக்க அரசியல் தலைவர் என்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) வைரக் கிரீடம் சூட்டப்பட்டுள்ளதற்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு இந்த மாமன்றத்தின் சார்பாக எனது புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நற்பணிக்கு தோளோடு தோள் நின்று செயலாற்றி வரும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும், சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாமன்ற உறுப்பினர்களுக்கும் எனது புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஒன்றியம், திடுமல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில்

2020 ஜனவரி 7]

திடுமல் முழுநேர நியாய விலைக் கடை, திடுமல், நகப்பாளையம் பகுதியைச் சார்ந்த 145 குடும்ப அட்டைகளையும் சேர்த்து 494 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. பகுதிநேர நியாய விலைக் கடை புதிதாக அமைக்கப்பட வேண்டுமெனில், குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகளும், பிரித்த பின்பு தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமல் இருக்க வேண்டுமென்ற அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், திடுமல் நகப்பாளையம் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடையை துவக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள்.*

திரு. கே.எஸ். மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கழகத் தலைவர் அண்ணன் அவர்களை வணங்குகிறேன். திடுமல் நியாய விலைக் கடை, பேருந்து வசதி இல்லாத கிராமப்புறத்தில் உள்ளது. திடுமலிலிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்தில் திடுமல் நகப்பாளையம் உள்ளது. இது அருந்ததியர்கள் அதிகம் வசிக்கும் பகுதி. பெண்கள் 3 கிலோ மீட்டர் தூரத்திற்கு நடந்து சென்று பொருட்கள் வாங்குவதால், அரசின் நிபந்தனைகளைத் தளர்த்தி, 142 குடும்ப அட்டைதாரர்களின் நலன்கருதி திடுமல் நகப்பாளையம் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அமைந்த பிறகு, இதுபோன்ற ஊரகப் பகுதிகளில், கிராமப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் தங்கு தடையின்றி கிடைக்க வேண்டுமென்பதற்காகத்தான் பல்வேறு நிலைகளில் பகுதிநேர நியாய விலைக் கடைகளும், முழுநேர நியாய விலைக் கடைகளும் என ஏறத்தாழ 2,448 கடைகள் தொடர்ந்து திறக்கப்பட்டு வருகின்றன.*

இப்போது கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக ஏறத்தாழ 32,957 நியாய விலைக் கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன. 1964–ல் 4,441 நியாய விலைக் கடைகள் இருந்த நிலையில் 1978–ல் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. மூர்த்தி அவர்கள் கேட்டதைப்போல கிராமத்திற்கு ஒரு கடை என்று கொண்டு வந்தார்கள். அப்போது கார்டுகளையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. கிராமத்திற்கு ஒரு கடை என்ற முறையில், 1984–ல் 15,501 கடைகளாக விரிவாக்கம் செய்யப்பட்டது. பல்வேறு அரசுகள் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, இன்றைக்கு 32,957 கடைகள் இருக்கின்றன. இதுதவிர, போக்குவரத்து வசதியில்லாமல் இருக்கின்ற பகுதிகளுக்கு, 46 நகரும் நியாய விலைக் கடைகளின்மூலமாக அந்தப் பகுதி மக்களுக்கு பொருட்கள் வழங்கப்படுகின்றன. நியாயமான விலையில் கொடுக்க வேண்டும், தங்குதடையின்றி கிடைக்க வேண்டும், சிரமம் ஏற்படக் கூடாது என்ற அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. எனவே, அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும். 2 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது என்று துறைரீதியாக பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும், சிறப்பினமாக இதைக் கொடுப்பதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்பதைத் துறை மூலமாக ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதிபெற்று, கடையைத் திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள்.*

திரு. கே.எஸ். மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகப்படியான முழுநேர நியாய விலைக் கடைகள், பகுதிநேரக் கடைகள் கட்டட வசதி இல்லாமல் இருக்கின்றன. அதை கவனத்தில் எடுத்துக் கொண்டு, நிதி ஒதுக்கீடு செய்து நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

2020 ஜனவரி 7]

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்தக் கடைகளை எல்லாம் கூட்டுறவுச் சங்கங்கள்தான் நடத்துகின்றன என்பது இங்கிருக்கின்ற அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும் தெரியும். புதிய நியாய விலைக் கடைகளைக் கட்ட வேண்டுமென்றால், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கொடுக்கலாம் அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து பெற்றுக் கொடுக்கலாம். இல்லாத நேர்வில் ஊரக வளர்ச்சி முகமை நிதியிலிருந்தோ, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் சிறப்பு நிதியிலிருந்தோ கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வந்ததற்குப் பின்பு, 674 முழுநேர நியாய விலைக் கடைகளைக் கட்டியிருக்கிறது.*

முற்பகல் 10–45

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வந்ததற்குப் பிறகு, ஏறத்தாழ 731 பகுதிநேர நியாய விலைக் கடைகள் கட்டப்பட்டிருக்கின்றன. 1,960 கடைகள் இதுவரைக்கும் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர், உங்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியைக் கொடுத்தும் கட்டலாம் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ஒட்டன்சத்திரம் தொகுதியில் ஏற்கெனவே இயங்கி வந்த 29 பகுதிநேர நியாய விலைக் கடைகள் இன்றைக்கு மூடப்பட்டிருக்கின்றன. அவற்றிற்கு சொந்தக் கட்டடங்கள்கூட கட்டப்பட்டிருக்கின்றன. கடந்த 13–8–2019–ல் நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் நேரடியாகச் சென்று கடிதம் கொடுத்தும், இதுநாள்வரை திறக்கப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 150 குடும்ப அட்டைகள் இருந்தால் பகுதிநேர நியாய விலைக் கடை திறக்கப்படுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். 4 கிலோ மீட்டர், 5 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்ற பகுதிகளில் கடைகள் திறக்கப்படாமல் இருக்கின்ற காரணத்தினால், பொது மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். அந்தப் பட்டியலைத் தங்களிடத்தில் தருகிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் இணைப் பதிவாளர் ஆகியோரைத் தொடர்புகொண்டு, அவற்றை*

உடனடியாகத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக கொறடா, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள், 29 கடைகள் மூடப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அவர், அந்த விவரத்தைக் கொடுக்கலாம். திறந்த கடைகள் நிச்சயமாக மூடப்பட்டிருக்காது. அது தவறான தகவல். (குறுக்கீடு) இருங்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், தவறான தகவலை இந்த மாமன்றத்தில் பதிவு செய்திருக்கிறார். 29 கடைகளை நாங்கள் அடைத்ததே கிடையாது. எந்தக் கடையும் அடைக்கப்பட மாட்டாது. ஏதாவது கடைகள் கட்டியிருக்கும்பட்சத்தில், அதற்கு துறை ரீதியாக அனுமதி பெற்றிருக்க வேண்டும், (குறுக்கீடு) இல்லை, ஒரு நிமிடம் நான் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு கடை கட்டப்படுகிறதென்றால், அதை எந்த இடத்தில் கட்டினாலும், அதற்கு ஒரு No Objection உள்ளாட்சித் துறையிடமிருந்து வாங்கிவிட வேண்டும். அதை வாங்கிவிட்டு கட்டினார்களென்றால் பரவாயில்லை. அந்தப் பகுதி மக்களில் சிலபேர் ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்கிறார்கள். அங்கே சென்று பொருட்கள் வாங்க மாட்டேன் என்கிறார்கள். அந்தக் கடை ரொம்ப தூரத்தில் கட்டப்பட்டிருக்கிறது; எங்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று மக்கள் மறுக்கின்றனர். சில இடங்களில் மின்சார வசதி செய்ய முடியவில்லை. இப்படிப் பல்வேறு காரணங்களினால்தான் இந்தப் புதிய கட்டடங்கள் திறக்கப்படாமல் இருக்கின்றன. அவர் குறிப்பிட்ட 29 கடைகள் என்பது தவறான தகவல். இம்மாமன்றத்திற்கு தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்திருக்கிறார். அவர் அந்த விவரத்தைக் கொடுக்கும்பட்சத்தில் உறுதியாக நடவடிக்கை எடுக்கப்படும். கிராமப் பகுதிகளில், போக்குவரத்து இல்லாத பகுதிகளில் மக்களுக்கு பொருட்கள் கிடைக்க வேண்டுமென்பதற்காக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலேயே நகரும் நியாய விலைக் கடைகள் மூலமாகப் பொருட்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

2020 ஜனவரி 7]

இதைப்போன்று, ஊரகப் பகுதிகளில், எளிதில் அணுக இயலாத பகுதிகளில், bus போக்குவரத்து இல்லாத பகுதிகளில் நகரும் நியாய விலைக் கடைகள் மூலமாகக் கொடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை என்னிடத்தில் கொடுக்கும்பட்சத்தில் அதுகுறித்து நிச்சயமாக, உறுதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மருதமுத்து, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

4—

துணை மின் நிலையம்

***47289—திரு. அ. மருதமுத்து:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கெங்கவல்லி தொகுதி, இலுப்பநத்தம் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக்க வேண்டுமென்ற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) கனவை இன்றையதினம் நனவாக்கி இருக்கின்ற மரியாதைக்குரிய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, அதற்கு உறுதுணையாக இருக்கின்ற மரியாதைக்குரிய துணை முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் உள்ள இலுப்பநத்தம் ஊராட்சியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். இப்போது அதற்கான அரசாணை பெறப்பட்டிருக்கிறது. உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.